DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE KANYAKUMARI
AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023

Prosecution Witness -P.W. 17

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜஸ்டின் ராஜ் |
| Father's Name | : | செல்வராஜ் |
| Village | : | ஆற்றூர் |
| Taluk | : | திருவட்டார் |
| Caste | : | நாடார் |
| Calling | : | இளநிலை மின் பொறியாளர் |
| Religion | : | கிறிஸ்டியன் |
| Age | : | 58 |
| Date | : | 20.11.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2024.

(1, 3 மற்றும் 4 ஆம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 2 எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

20.11.2024

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஆரல்வாய்மொழி கிளையில் வினியோக பிரிவில் இளநிலை மின் பொறியாளராக வேலை பார்த்து வருகிறேன். போலீசார் ஆரல்வாய்மொழி சி.எஸ்.ஐ. சர்ச் அருகில்

உள்ள ஆரல்வாய்மொழியிலிருந்து திட்டுவிளை செல்லும் ரோட்டில் 09.06.2023 அன்று மாலை 6.00 மணியிலிருந்து மறுநாள் காலை 6.00 மணி வரையில் மின்சாரம் தடையில்லாமல் இருந்ததா என்று விசாாித்தார்கள். தடை எதுவும் இல்லை என்று ஆவணங்களை பார்த்துச் சொன்னேன். அதற்கான சான்றும் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த சான்றுதான். அது அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாாித்தார்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்) :-**

நான் பார்த்தாக சொல்லும் பதிவேடு உதவி பொறியாளர் பொறுப்பில் இருக்கும் என்றால் சரிதான். அவர்தான் இது போன்ற சான்றிதழ் கொடுக்க பொறுப்பான அதிகாாி என்றால் எனக்கும் அதிகாரம் உள்ளது. துணை மின் நிலையத்திலிருந்து எவ்வளவு மின்சாரம் வருகிறது, எங்கெங்கே அனுப்பப்படுகிறது, எப்போதெல்லாம் மின்சாரம் தடைபடுகிறது போன்ற விவரங்களை பராமாிப்பது உதவி பொறியாளர்தான் என்றால் சரிதான். துணை மின் நிலையத்தில் இருக்கும். தெரு விளக்குகள் பராமாிப்பது என் பொறுப்பில் இல்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து பொறுப்பு. பஞ்சாயத்திலும் அதற்கான கம்பியாளர்களும், சுவிட் ஆப்ரேட்டர்களும், இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள்தான் அந்த பகுதியில் தெருவிளக்குகள் எரிந்ததா, இல்லையா என்று சொல்ல முடியும் என்றால்சரிதான். எனக்கு இது போன்ற சான்று கொடுக்கவே அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2, 3 மற்றும் 4 ஆம் எதிரிகள் தரப்பில்) :-**

2, 3 மற்றும் 4 வது எதிரிகள் மேலே சொன்ன குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.